# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 100/2016

Court Witness 1

| | | | |
|---|---|---|---|
| Name | : R.வெங்கடாசலம் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.ராமன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of April 2024.

<u>முதல் விசாரணை</u> :

1. நான் தற்போது ஆனைமலை காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். சிசி 100/2016 வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி குட்டி(எ)துஷ்யந்த், த/பெ.அருள்இன்பத்தேவர், இலங்கை அகதிகள் முகாம், கோட்டூர், பொள்ளாச்சி என்பவர் நீதிமன்றத்தில் 10.01.2017 அன்று ஆஜராகாததால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. எனவே மேற்படி எதிரிக்கு 06.08.2019 அன்று க.எண்.786/2019 மூலம் ஆணைமலை காவல் ஆய்வாளருக்கு பிடி கட்டளை வழங்கப்பட்டது.

2. மேற்படி எதிரி மீதான பிடி கட்டளை நிறைவேற்ற இயலவில்லை என ஆனைமலை காவல் ஆய்வாளர் 01.02.2024 அன்று அறிக்கை சமர்ப்பித்துள்ளார். எனவே காவல் துணை கண்காணிப்பாளர், வால்பாறை உட்கோட்டம் அவர்களுக்கு 26.02.2024 அன்று க.எண்.233/2024 மூலம் மேற்படி எதிரி மீதான பிடி கட்டளையை நிறைவேற்றக்கோரி கடிதம் அனுப்பப்பட்டது.

3. மேற்படி காவல் துணை கண்காளிப்பாளர் 25.03.2024 அன்று மேற்படி வழக்கை நீண்ட கால நிலுவை வழக்காக நடத்தக்கோரி அறிக்கை சமர்ப்பித்துள்ளார். எனவே இந்நீதிமன்றத்தில் இருந்து 26.02.2024 அன்று க.எண்.233/2024 மூலம் கு.வி.மு.ச, பிரிவு 82-ன் கீழான அறிவிப்பை பெற்று பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களான 1) கிராம நிர்வாக அலுவலகம், கோட்டூர், 2) கோட்டூர் பேருந்து நிறுத்தம், 3) ஆனைமலை மாசானியம்மன் கோவில், 4) ஆனைமலை முக்கோணம் சந்திப்பு, 5) இந்நீதிமன்ற வளாகம் ஆகிய இடங்களில் ஒட்டி விளம்பரப்படுத்தினேன்.

4. மேலும் மேற்படி எதிரியை இன்று இவ்வழக்கின் பொருட்டு இந்நீதிமன்றத்தில் இன்று 26.04.2024 மூன்று முறை அழைத்தும் மேற்கண்ட எதிரியானவர் ஆஜராகவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.